செய்தி வெளியீட்டு எண்–101 நாள்: 1.2.2010

# செய்தி வெளியீடு

## கும்பகோணம் அருகே
## குளத்தில் மூழ்கி இறந்த பள்ளி மாணவர்கள் மூவரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை !

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகில் சோழபுரம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படித்து வந்த மாணவர்களான; காசிராமன் என்பவரின் மகன் ரூபன் (வயது 10), ரமேஷ் என்பவரின் மகன் வினோத் (வயது 10), பொன்னன் என்பவரின் மகன் அன்பழகன் (வயது 10) ஆகிய மூவரும், கடந்த வெள்ளிக்கிழமையன்று சோழபுரம் புதுத் தெருவில் இருக்கும் குளத்தில் அல்லிக்காய் பறிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி இறந்துள்ளனர். இதுபற்றிய விவரம் அறிந்ததும், மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தாருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், அவர்கள் ஒவ்வொருவரின் பெற்றோர்க்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட இன்று (1.2.2010 ) ஆணையிட்டுள்ளார்கள்.

* * * * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.